பக்கங்கள் 25

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 28 ஞாயிற்றுக்கிழமை 11.02.2024 அதிர்வு 195

## மைத்திரிபாலவும் இந்தியா விஜயம்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

04



# ராஜபக்ஷக்களின் காவலனே ரணில்

## அவரின் அழைப்பை அடியோடு நிராகரித்தார் அநுரகுமார எம்.பி.



“மக்கள் ஆணை இல்லாத தலைவரின் அழைப்பை ஏற்பதற்கு நாம் தயாரில்லை. மக்கள் ஆணையுடன் ஆட்சிக்கு வரும் தலைவர்களுடன்தான் நாம் பேச்சு நடத்துவோம். ரணில் விக்கிரமசிங்க என்பவர் ராஜபக்ஷக்களின் காவலன் மாத்திரமே.”

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று நாடு திரும்பிய பின்னர் விமான நிலையத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில், அக்கிராசன உரை ஊடாக ஜனாதிபதி விடுத்த அழைப்பு சம்பந்தமாக வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

04

### கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இருந்து

## சடலமாக மீட்கப்பட்ட பொலிஸ் அலுவலர்



யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இருந்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, செங்கலடியைச் சேர்ந்த உதயராஜ் என்ற பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் நிலையத்தின் அறையொன்றில் இன்று அதிகாலை வேளை சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணையில் மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.

04

### வீதியில் நெல் பரவிக் கொண்டிருந்தபோது

## மோட்டார் சைக்கிள் மோதி ஒருவர் சாவு!



யாழ்ப்பாணம், வடமராட்சி பகுதியில் வீதியில் நெல்லைப் பரவிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் மோட்டார் சைக்கிள் மோதி உயிரிழந்துள்ளார்.

வடமராட்சியையும் தென்மராட்சியையும் இணைக்கும் கச்சாய் – புலோலி வீதியில் மாக்கிராய் பகுதியில் இன்று காலை இந்த விபத்து

04

# சுமார் 35 வருடங்களாகத் தேடப்பட்டு வந்த கொலைக் குற்றவாளியான பெண் கைது!



கொலையொன்றைச் செய்து மரண தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் 35 வருடங்களாக தலைமறைவாக இருந்த பெண்ணொருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் படுகொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

1989 ஆம் ஆண்டு அத்துருகிரிய வெல்லவ பிரதேசத்தில் இலங்கை மின்சார சபை தர பரிசோதகர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் பொரளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

கொலை செய்யப்பட்ட நபரின் மனைவி செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்படி அத்துருகிரிய வெல்லவ பிரதேசத்தில் வசிக்கும் கணவன், மனைவியைப் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

அப்போது கைது செய்யப்பட்ட 30 வயது மதிக்கத்தக்க பெண் மின்சார சபையில் ஆங்கில தட்டச்சராகப் பணியாற்றி வந்ததும், கொலை செய்யப்பட்ட நபருடன் தவறான தொடர்பு வைத்திருந்ததும் தெரியவந்தது.

1989 ஆம் ஆண்டு ஒரு குறிப்பிட்ட நாளில், இது தொடர்பான உறவு தனது கணவருக்குத் தெரியவந்ததையடுத்து, அந்தப் பெண் தனது கள்ளக்காதலரை அத்துருகிரிய, வெல்லவயில் உள்ள தனது வீட்டுக்கு அழைத்துள்ளார்.

அங்கு கணவருடன் சேர்ந்து கள்ளக் காதலரைத் துண்டு துண்டுகளாக வெட்டிக் கொலை செய்து பீப்பாயிலிட்டு கிணற்றில் போட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து, கணவன், மனைவி இருவரும் 6 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட தம்பதியினர் பின்னர் தலைமறைவாகியிருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, அவர்கள் இல்லாமல் நடத்தப்பட்ட விசாரணைக்குப் பிறகு, தம்பதியருக்கு 2019 இல் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஆனால், கொலையைச் செய்த தம்பதியை எந்தப் பொலிஸாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில், கொலையைச் செய்த பெண், பண்டாரகம பமுனுகம பிரதேசத்தில் வாடகை வீட்டில் பதுங்கி இருக்கின்றார் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் படுகொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்குத் தகவல் கிடைத்திருந்தது.

அதன்படி விசாரணை அதிகாரிகள் நேற்றுமுன்தினம் அவரைக் கைது செய்தனர். தற்போது, ஒரு பிள்ளைக்குத் தாயான குறித்த பெண்ணுக்கு 64 வயதாகும்.

பிணை வழங்கப்பட்ட பின்னர் கடந்த 35 வருடங்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள உறவினர்களின் வீடுகளில் தம்பதியினர் தலைமறைவாகி வாழ்ந்து வந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரிடம் சிக்கிக்கொள்வோமோ என்ற அச்சத்தில் தாமும் கணவரும் தற்போது பிரிந்து வாழ்ந்து வருவதாக மேற்படி பெண் விசாரணையின்போது தெரிவித்துள்ளார். எனினும், அவரது கணவர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

சந்தேகநபரான பெண் ஹோமாகம நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் நாளை 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.




# மினுவாங்கொடையில் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்களில் ஒருவர் வெட்டிக்கொலை

மினுவாங்கொடை – யாகொடமுல்ல பிரதேசத்தில் வீடொன்றுக்குள் நுழைந்த கொள்ளையர் ஒருவர், வீட்டில் இருந்தவர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

இன்று அதிகாலை 4 மணியளவில் மூவர் அடங்கிய கொள்ளைக் குழு குறித்த வீட்டுக்குள் கொள்ளையிடும் நோக்கில் நுழைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது கொள்ளையர்களில் ஒருவரை வீட்டில் இருந்த ஒருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டினார் என்று கூறப்படுகின்றது.

இதில் பலத்த காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மற்றைய இரண்டு கொள்ளையர்களும் தப்பிச் சென்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மினுவாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இராணுவப் பாதுகாப்புடன் வெடுக்குநாறிமலைக்கு பௌத்த பிக்கு தலைமையிலான குழுவினர் விஜயம்

## ஆலயப் பகுதிகளில் பாதணிகளுடன் நடமாட்டம் தங்கள் சொந்த இடம் என்றும் உரிமை கோரினர்

(வசந்தன்)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதி இலிங்கேஸ்வரர் ஆலயத்துக்குப் பௌத்த பிக்குகள் தலைமையிலான குழுவினர் இராணுவப் பாதுகாப்புடன் இன்று விஜயம் செய்திருந்தனர்.

இதன்போது, ஆலயத்தின் நிர்வாகத்தினரும் அங்கு பிரசன்னமாகியிந்தனர்.

இராணுவப் பாதுகாப்புடன் சென்ற பௌத்த பிக்கு தலைமையிலான குழுவினர் இது தங்களது இடம் எனத் தெரிவித்து அப் பகுதியைச் சுற்றிப் பார்வையிட்டதுடன், ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் விக்கிரகப் பகுதிகளிலும் பாதணிகளுடன் நடமாடியுள்ளனர்.

இந்தக் குழுவினரின் கருத்தை மறுத்த ஆலய நிர்வாகத்தினர் இது தமது மூதாதையர்களால் பூர்வீகமாக வழிபட்டு வந்த பிரதேசம் என்று இதன்போது தெரிவித்திருந்தனர்.









# மடுவில் எஸ்.ரி.எவ். சுற்றிவளைப்பு கோடா, கசிப்புடன் இருவர் சிக்கினர்

(வசந்தன்)

மடு, பண்டிவிரிச்சான் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் இன்று மேற்கொண்ட விசேட சுற்றிவளைப் பின்போது இருவர் கைது செய்யப்பட் டுள்ளனர் என்று மடு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, மடுகந்தைப் பகுதியில் உள்ள விசேட அதிரடிப் படையினருக் குக் கிடைத்த இரகசியத் தகவலை யடுத்து விசேட அதிரடிப் படைக் கொமாண்டர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வர்ண ஜெயசுந் தரவின் நெறிப்படுத்தலில், விசேட அதி ரடிப் படையின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கொடித்துவக்குவின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினர் மடு, பண்டிவிரிச்சான் பிரதேசத்தில் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்ட னர்.

இதன்போது, காட்டுப் பகுதியில் ஆயிரம் லீற்றர் கோடா மற்றும் 35 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன், அதனை உடமையில் வைத்திருந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும், மீட் கப்பட்ட பொருட்களுடன் மடு பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை மடுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.










## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மைத்திரியும்...**

அறிவித்துள்ளது.

எதிர்வரும் வாரத்தில் மைத்திரிபால சிறிசேன இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்ய வுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்திய அரசின் உத்தியோகபூர்வ அழைப்பின் அடிப்படையில் அவர் இந் தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய அரசியல் பொருளாதார நிலைமைகள் தொடர் பில் இந்தியத் தலைவர்களுடன் மைத் திரிபால பேச்சு நடத்தவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய விஜயத்தின் பின்னர் மைத் திரிபால அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி அறிவித்துள்ளது.

அமெரிக்க அரசியல் தலைவர்கள் மற்றும் அமெரிக்க வாழ் இலங்கையர் களை சந்தித்து மைத்திரிபால பேச்சு நடத்தவுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பல்வேறு அரசியல் தரப்புக்களுக்கு இந்திய மத்திய அரசு தமது நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு உத்தியோகபூர்வ அழைப்பு விடுத்துள் ளமை குறிப்பிடத்தக்கது. அந்தவகை யில் அண்மையில் இந்தியா சென்ற அநுரகுமார திஸாநாயக்க தலைமையி லான தேசிய மக்கள் சக்தியினர் நேற்று நாடு திரும்பியிருந்தனர்.

---

**ராஜபக்ஷக்களின்...**

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:-

"ரணில் விக்கிரமசிங்க என்பவர் மக் களால் நிராகரிக்கப்பட்டவர். மக்கள் வாக்குகளால் நாடாளுமன்றம்கூட வர முடியாமல் போனவர். அப்படியான தலைவர்களுடன் எமக்கு எவ்வித கொடுக் கல் - வாங்கல்களும் இல்லை. மக்கள் ஆணையுடன் ஆட்சிக்கு வரும் தலை வர்களுடன்தான் பேச்சு நடத்த வேண்டும் என்பதே எமது கொள்கை.

எந்தத் தேர்தலை ஒத்திவைத்தாலும் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது. நிதி இல்லை எனவும் கூற முடியாது. ஜனாதிபதியால் 19 தடவைகள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குப் பணம் இருக்கின்றதெனில், அவ்வாறு செல்லும் தருவாயில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப் பினர்களை அழைத்துச் செல்ல பணம் இருக்கின்றதெனில் தேர்தலை நடத்த ஏன் பணம் இல்லை?

இலங்கை என்பது வளர்ந்து வரும் நாடு. எனவே, சர்வதேச ஒத்துழைப்பு அவசியம். தனித்துச் செயற்பட முடியாது. இந்திய விஜயம் சம்பந்தமாக விரிவான விளக்கத்தை ஊடகவியலாளர் சந்திப்பு ஊடாக அறிவிப்போம்." - என்றார்.

---

**மோட்டார் சைக்கிள்...**

இடம்பெற்றது.

வீதியில் நெல்லைப் பரவிக் கொண்டி ருந்தவர் மீது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

**சடலமாக மீட்கப்பட்ட...**

எனினும், உயிரிழப்புக்கான காரணம் தெரியவரவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சுகாதார துறையினர் வெளியேறுவதால் சவாலுக்கு உள்ளாகியுள்ளது எமது நாடு!

## வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

ஐந்து வருட கால விடுமுறையில் வெளிநாட்டுக்குச் செல்லலாம் என்ற திட்டத்தால் எனக்கு நாளாந்தம் சுமார் இருநூறு கோவைகள் வந்த வண்ணம் இருக்கின்றன. இதில் அதிகமானவை மருத்துவத் துறையைச் சார்ந்தவர்களுடையதாகவே இருக்கின்றன. இவர்களின் இடத்தை எவ்வாறு சமாளிப்பது என்பதே பெரும் சவாலாக உள்ளது. சுகாதாரத் துறையினர் நாட்டை விட்டு வெளியேறுவதால் எமது நாடு பெரும் சவாலுக்கு உள்ளாகியுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

பிரிட்டன் மன்னார் நலன்புரி சங்கததின் நிதி அனுசரனையுடன் 38 மில்லியன் ரூபா செலவில் உயர்தர வசதிகளுடன் மன்னார் பொது வைத்தியசாலையிலுள்ள மகற்பேறு வார்ட்டுகள்ள புனரமைக்கப்பட்டன.

இந்த நிலையில் அவற்றை வெள்ளிக்கிழமை (09) திறந்து வைக்கும் நிகழ்வில் பிரதம அத்தியாகக் கலந்த கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கை சுகாதார துறை மற்றும் கல்வித் துறைகள் மிகவும் சவாலுக்கு உள்ளாகியுள்ளன. மிகவும் குறைவாக வரி அறவிடுவது எமது நாடாகும்.

இந்த நாடானாது முதலாம் ஆண்டு தொடக்கம் பல்கலைக்கழகம் செல்லும்வரை மாணவர்களுக்கு இலவச கல்வியை வழங்கி வருகின்றது.

மருத்துவத்திலும் இலவச உதவிகளையும் சகல விதமான மருத்துவ வசதிகளையும் வழங்கி வருகிறது இந்த நாடு.

இந்த நாட்டில் இருக்கும் அனைத்து அமைச்சுக்களிலும் மிகப் பாரிய மாதாந்த செலவாகக் கொண்டிருப்பது சுகாதார அமைச்சாகும்.

2019 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சின் செயலாளராக நான் இருந்தவேளை, ஒரு மாதத்துக்குப் பத்து மில்லியன் ரூபாவை இந்த சுகாதார அமைச்சு செலவு செய்தது. இந்தப் பாரிய சுமையைச் சுமந்து கொண்டுதான் அரசு இருக்கின்றது. தற்பொழுது சுகாதார சேவையில் பாரிய சவாலை நோக்கும் நிலை உருவாகியுள்ளது.

மருத்துவர்கள், மருத்துவ தாதிகள் மற்றும் மருத்துவ தொழில் நுட்பம் கொண்டவர்கள் வெளியேறிக் கொண்டு இருக்கின்றனர்.

இதன் காரணமாகப் பல வைத்தியசாலைகளில் சிறந்த வைத்திய சேவைகளை செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது.

இதனால் வைத்திய சேவைப் பணிப்பாளர்கள் , அத்தியட்சகர்கள், நிர்வாகங்கள் தடுமாறிக் கொண்டு இருக்கின்றனர்.

இவ்வாறான சவால்களுக்கு மத்தியில்தான் சுகாதார சேவைகளை முன்னெடுக்க வேண்டி இருக்கின்றது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பொருளாதார நெருக்கடியின் காரணமாக தற்பொழுது ஆட்சேர்ப்புத் திட்டம். கட்டட நிர்மானத் திட்டங்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

இருந்தும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இது தொடர்பாக தொடர்புகளை மேம்படுத்தி வருகின்றோம்.

நான் இதற்கு முன் வடக்கு மாகாணத்தில் ஆளுநராக இருந்த வேளையில் மன்னார் மற்றும் முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் கட்டடங்கள் அமைப்பதற்கு இந்திய அரசிடம் முன்மொழி செய்திருந்தேன்.

அப்பொழுது அதை முன்னெடுத்து செல்ல முடியவில்லை. ஆனால் இப்பொழுது 200 மில்லியன் ரூபாவிலிருந்து 260 மில்லியனாக உயர்த்தி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் இந்தியத் தூதரை நான் சந்தித்தபோது




இந்த இரண்டு வைத்திசாலைகளின் தேவைகளை முன்னுரிமைப்படுத்திப் பேசியுள்ளேன்.

கடந்த இரண்டு வருடங்களாக எங்களுக்கு வழங்கப்படும் மாகாண நிதியூடாக ஏற்கனவே தொடங்கப்பட்ட வேலைத் திட்டங்களே நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

புதிய திட்டங்கள் முன்னெடுக்கப்படாவிடினும் சென்ற வருடம் மன்னாருக்கு 26 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று மாகாணப் பணிப்பாளர் தெரிவித்தார்.

நிதி ஒதுக்கீடுகள் மிக குறைவாகக் காணப்பட்டாலும் இது நிரந்திரமாக அமையாது. எமது ஜனாதிபதி இதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றார்.

இங்கு சுகாதார பகுதியில் ஆளணிப் பற்றாக்குறை தொடர்பாக தெரிவிக்கப்பட்டது. ஜனாதிபதி இரண்டு திட்டங்களை வழங்கியுள்ளார். ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள வெற்றிடங்களை நிறப்புவது, மற்றையது மாகாண சபையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவது. மற்றது தேவையான வெற்றிடங்களை அடையாளப்படுத்துவது.

இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே ஐந்து மாவட்டங்களிலும் சுகாதார சேவைகள் சம்பந்தமான வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

புதிய ஆளனிகள் சேர்க்கப்படாவிட்டாலும் ஜனாதிபதியின் விஷேட அனுமதியில் வடக்கு மாகாணத்தில் மாற்றாற்றால் உள்ளவர்களுக்கான விஷேட பராமரிப்புக்காக நவீன வைத்தியசாலை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இருந்தும் தற்பொழுது உள்ள பெரிய சவால் என்ன வென்றால் எங்கிருந்து சுகாதார பகுதிக்கு ஆளணியை கொண்டு வருவது என்பதுதான்.

ஐந்து வருட விடுமுறையில் வெளிநாடுகளுக்குச் செல்லும் சுதகாதாரத் துறையினர் மீண்டும் நாட்டுக்கு திரும்புவார்களா என்பதும் சந்தேகமாகவே காணப்படுகின்றது.

இலவச கல்வியை பெற்று பல்கலைக்கழகம் வரைச் சென்று வைத்தியர்களாகவோ அல்லது வேறு சுகாதார துறைகளில் விஷேடமாக இலவசமாக பயிற்றுவித்தவர்கள் வெளியே சென்றால் யாரைப் பிடிப்பது என்பதுதான் சவாலாக இருக்கின்றது.

இது இங்குள்ள சவால் மட்டுமல்ல இலங்கை பூராகவும் உள்ள சவாலாக அமைந்துள்ளது.

பொருளாதாரப் பிரச்சினையால் இவ்வாறு எல்லோரும் வெளியேறினால் இந்த நாட்டின் நிலைமை என்னாவது? இந்த நாட்டின் வளர்ச்சியில் எம் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு உள்ளது.-என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சர்ச்சைக்குரிய சட்ட உருவாக்கம்

ரணில் விக்கிரமசிங்க அரசு அவசர அவசரமாகக் கொண்டு வந்து நிறைவேற்றிய நிகழ்நிலைக் காப்புச் சட்டம் இலங்கையில் அரசமைப்பு ரீதியான ஜனநாயகம், அரசமைப்புக்கு அமைவாக சட்டங்களை உருவாக்குதல் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவை தொடர்பில் பல்வேறு ஐயங்களைக் கிளப்பியுள்ளது.

இந்தச்சட்டமும் அது நிறைவேற்றப்பட்ட முறைமையும் இந்த நாட்டில் உயர்ந்த ஜனநாயகம் நிலை நிறுத்தப்படுவதை கேள்விக்கு உள்ளாக்கி விட்டன என்று மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் தெரிவித்திருக்கும் கருத்து புறம் தள்ளத் தக்கதல்ல.

இந்தச் சட்ட மூலம் தயாரிக்கப்பட்ட முறைமை கூட பகிரங்கமானது அல்ல. மூடி மறைத்து - ஒளிவு மறைவாக - வெளியே சத்தம் சந்தடி இன்றி - காதும் காதும் வைத்த மாதிரி - அது தயாரிக்கப்பட்டமையே அந்தச் சட்டம் கொண்டுவரும் நோக்கத்தின் உள்ளாந்தத்தை அம்பலப்படுத்தப் போதுமானது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இலங்கையில் பிரஜைகளின் அடிப்படை உரிமைகள், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றுக்குப் பெரும் குந்தகம் விளைவிக்கும் இந்த நிகழ்நிலை காப்புச் சட்டம் மக்களின் கலந்தாய்வுக்கும் பொது விவாதத்துக்கும் கொண்டுவரப்படாமல் - நாடாளுமன்றத்தில் வெளிப்படையான ஆய்வுக்கும் ஆலோசனைக்கும் நேரமும் சந்தர்ப்பமும் வழங்கப்படாமல் - நிறைவேற்றப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றமை இந்த நடவடிக்கைக்குள் புதைந்து கிடக்கும் சதித்திட்ட சித்தாந்தங்களை உறுதிப்படுத்துவதற்கு போதுமானதாகும்.

ஒரு சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய வழிகாட்டலைப் பின்பற்றுவதும் பின்பற்றாமல் விடுவதும் நாடாளுமன்றத்தின் விருப்பத்துக்கும் முடிவுக்கு உரியது என்ற மாதிரியே இந்தச் சட்ட மூல விடயத்தில் நடைமுறை பின்பற்றப்பட்டு இருக்கின்றது.

உயர்நீதிமன்றம் வழங்கிய வழிகாட்டலை முறையாகப் பின்பற்றாமல், தன்னிஷ்டப்படி நாடாளுமன்றம் சட்டமூலம் ஒன்றை நிறைவேற்ற முடியும் என்ற முன்மாதிரி நாட்டுக்கு பேராபத்தானதாகும். ஜனநாயக ஆட்சி முறைமைக்கு சாவுமணி அடிப்பதாகும்.

சட்டம் இயற்றும் விடயம் தொடர்பில் நாடாளுமன்றுக்கு உள்ள அதிகாரம் கட்டுமட்டற்றது, எல்லை மீறியது என்ற கோட்பாட்டியலை உறுதிப்படுத்துமாறு போல நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நிறைவேற்றும் விடயத்தில் நடவடிக்கை முறைமை பின்பற்றப்பட்டு இருக்கின்றது.

இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும். நாடாளுமன்ற ஜனநாயகம், நாடாளுமன்ற செயற்பாட்டின் மூலமே தகர்த்தெறியப்படும் ஆபத்து இந்தச் சட்டம் மூலத்தை நிறைவேற்றிய முன்மாதிரியினால் ஏற்படப் போகின்றது. சட்டமாக்குவது தொடர்பான நாடாளுமன்றத்தின் மீயுயர் தன்மை அதன் முறையற்ற சட்டவாக்கல் முறைமைகளால் நாசமாகும் நிலைமையும் ஏற்படும்.

சட்ட வியாக்கியானங்கள், சட்ட வழி காட்டல்கள் போன்றவை தொடர்பில் உயர் நீதிமன்றத்திற்கு இருக்கும் தனித்துவ அதிகாரங்களை, உயர்நீதிமன்ற வழி காட்டலை மீறி - புறந்தள்ளி - சட்டங்களை தன்னிஷ்டப்படி நாடாளுமன்றம் யாக்கலாம் என்ற நிலைமை இல்லாமல் ஆக்கிவிடும் மோசமான சூழலும் இப்போது ஏற்பட்டிருப்பதை மாற்றுக்கொள்கைகளுக்கான மையம் சுட்டிக்காட்டுகின்றது.

சட்டமாக்கல் விடயங்களில் உயர்நீதி மன்றம் வழங்கும் வழிகாட்டல்கள் முறையாகப் பின்பற்றப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றவா என்பதை தெளிவாக வரையறை செய்து, உறுதிப்படுத்தும் ஒரு பொறிமுறை நாட்டில் இல்லாமலேயே கடந்த 45 வருடங்களாக இந்த நாட்டில் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன என்பதையே இப்போது இந்த சட்டம் நிறைவேற்றப்பட்ட முறைமை நமக்கு உறுதிப்படுத்தித் தெளிவாக்கி இருக்கின்றது.

சட்ட வியாக்கியானங்களில் உயர்நீதி மன்றத்தின் தனித்து அதிகாரத்தை - மேலாதிக்க நிலையை - புறந்தள்ளி, கருத்தில் எடுக்காமல், நாடாளுமன்றம் தன்னிஷ்டப்படி சட்டங்களை யாக்கலாம் என்ற முறையற்ற நிலைமையே இந்த நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட முறைமை மூலம் அம்பலப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

நாடாளுமன்றத்தின் சட்டவாக்கல் அதிகாரம் எதிர்காலத்தில் வரம்பு மீறி பிரயோகிக்கப்படுவதற்கும், காட்டாட்சிச் சட்டங்கள் தங்கு தடையின்றி நடைமுறைக்கு கொண்டுவரப்படுவதற்கும் இந்த நிகழ்நிலை காப்புச் சட்ட உருவாக்க முன்மாதிரி அமையப் போகின்றது என்பது தான் இதில் உள்ள பெரும் தீங்காகும்.





# கல்முனை பிராந்தியத்துக்கு தனியான ஆய்வுகூட விரிவாக்கல் நிலையம்!

(அபு அலா)

அட்டாளைச்சேனை - பாலமுனை பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேச வைத்தியசாலையில் கல்முனை பிராந்திய ஆய்வு கூடத்தின் விரிவாக்கல் நிலையம் இன்று (09) திறந்து வைக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய ஆய்வு உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இபாம் தலைமையில் இடம்பெற்ற இந்தத் திறப்பு விழாவில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆய்வு கூடத்தைத் திறந்து வைத்தார்.

கல்முனை பிராந்தியத்தில் உள்ள வைத்தியசாலைகளில் இருந்து கிடைக்கப்பெறும் இரத்தம், சிறுநீர் மற்றும் சளி மாதிரிகளை குறித்த ஆய்வு கூடத்தில் மிக விரைவாக பரிசோதனை செய்து அதன் பெறுபேறுகளை வழங்கி வைக்கும் நோக்கில் இந்த நிலையம் செயற்படும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சஹீலா இஸ்ஸதீன் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டும், எரிபொருளை சிக்கனமாக பாவிப்பதற்கும், மருத்துவ ஆய்வுகூட உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கும், மருத்துவ பரிசோதனை கருவிகளை முகாமைத்துவம் செய்வதற்கும் இந்த நிலையம் ஏதுவாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹீர், மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.ஏ.கபூர், பிராந்திய மலேரியா மருத்துவ அதிகாரி டாக்டர் எம்.எம்.நௌசாட், மாவட்ட ஆயுள்வேத பிராந்திய இணைப்பாளர் டாக்டர் எம்.ஏ.நபீல், தொழில் மற்றும் சுற்றுச்சூழல் உணவுப் பாதுகாப்பு பிராந்திய வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.நௌசாட், பொது மக்கள் சுகாதார பிராந்திய பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ்.சாபி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# டேர்பெண்டைன் காட்டில் தீ மூட்டினர் விஷமிகள்!

## பரவாது தடுக்க பொலிஸார் நடவடிக்கை

(மஸ்கெலியா நிருபர்)



மஸ்கெலியா, மவுஸ்சாக்கலை நீர்த் தேக்கத்துக்கு முன்பாக டேர்பெண்டைன் காட்டில் விஷமிகள் வைத்த தீ பரவாமல் தடுக்க மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்க பொலிஸ் உயர்பாகாப்புப் பிரிவு அதிகாரிகள் பிரதேச மக்களுடன் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் நிலவும் கடுமையான வறண்ட காலநிலையால், வன விலங்குகளை வேட்டையாடும் நோக்கத்துடன் சில விஷமிகள் நீர் பிடிப்பு பகுதிகளில் மானா பாற்றைக் காடுகளை எரிக்கத் தொடங்கியுள்ளனர்.

மவுஸ்சாக்கலை நீர்த்தேக்கத்தில் பகுதியில் உள்ள மாணா மற்றும் டேர் பெண்டைன் வண பகுதியில் வெள்ளிக் கிழமை விஷமிகளால் வைக்கப்பட்ட தீயை உடனடியாக அணைக்க தமது குழுவினர் பெரும் முயற்சியுடன் செயற் பட்டனர் என்று பொலிஸ் உயிர்காப்பு விசேட பிரிவு கடமையில் ஈடுபட்டுவரும் பொலிஸ் சார்ஜன்ட் பிரசன்னா தெரிவித்தார்.

சிவனொளிபாத யாத்திரிகர்களின் பாதுகாப்புக்காக, பொலிஸ் பணிப்பாளரின் பணிப்புரைக்கமைய, மவுசாகல நீர் தேக்க பகுதிகள், களனி கங்கை, கித்துல்கல பிரதேசத்தில் உள்ள ஆபத்தான இடங்களிலும், அவர்கள் நீராடும் விசேட கடமைகளுக்காக பொலிஸ் உயிர்காப்பு பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கடற்படைப் பிரிவினர், பொலிஸ் அத்தியட்சகர் கே.என்.குண வர்தன தலைமையில் நீர்த்தேக்க பாதுகாப்பு பகுதிகளில் ஏற்படும் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



# காத்தான்குடியில் பிரதேச கலை இலக்கிய விழா; கலைஞர்கள் கௌரவிப்பு: சிறப்பு மலர் வெளியீடு!

(எம்.எம்.றம்ஸீன்)

கலாசார அலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் காத்தான்குடி பிரதேச செயலக கலாசார அதிகார சபை மற்றும் கலாசாரப் பேரவை என்பன இணைந்து நடத்திய பிரதேச கலாசார விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் , காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ. உதயஸ்ரீதர் தலைமையில் காத்தான்குடி ஹிஸ்புல் லாஹ் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றன.



முஸ்லிங்களின் பாரம்பரிய கலை நிகழ்வுகளுடன் அதிதிகள், கௌரவம் பெறும் கலைஞர்கள் வரவேற்று அழைத்துச் செல்லப்பட்டு மேடை நிகழ்வாக அரங்கேறிய இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் கௌரவ அதிதியாகக் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பபணிப்பாளர் எஸ். நவநீதன், உள்ளிட்ட சிறப்பு அதிதிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் பிரதான அம்சங்களில் ஒன்றான நினைவு மலரின் முதல் பிரதி பிரதேச செயலர் அரச அதிபருக்கு வழங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து அரச அதிபர் ஜஸ்டினா முரளிதரன் நினைவு மலரை அதிதிகளுக்கும், கலைஞர்களுக்கும் வழங்கி வெளியிட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் மொழி பெயர்புத் துறைக்கு ஏ.பீ.எம். அப்ராரி, பன்முக ஆளுமை எம்.எல். அஹமது லெப்பை, கவிதைத் துறைக்கு மௌலவி. எம். எச்.எம். இக்பால் பலாஹி, கிராமியக் கலைக்கு ஆசிரியை. ஏம்.எச்.எஸ். பேளசியா, அறிவிப்புத் துறைக்கு ஏ. ஆர்.எம். அஸ்ஹர், இசைத் துறைக்கு கே.எம். அபுல் ஹஸன்ஆகிய ஆறு கலைஞர்கள் கலைச்சுடர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



# சமூகப் பணியின் மதிப்பீட்டு ஒன்று கூடல் அம்பாறையில்

(எம்.எம்.றம்ஸீன்)

தேசிய சமூக அபிவிருத்தி நிறு வனத்தின் ஏற்பாட்டில் சமூகப் பணியின் மதிப்பீட்டு ஒன்று கூடல் பல்கலைக்கழக மாணவி ஏ. எஸ். எஃப். இபாதா தலைமையில் இடம்பெற்றது.

சமுர்த்தி உத்தியோகத்தர் எம்.எம். ஜாபிர் வழிகாட்டலில், அம்பாறை மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.எம்.எம்.றிபாஸின் சிறப்பான ஆலோசனையின் கீழ் சாய்ந்தமருது எம்.எஸ் காரியப்பர் வித்தியாலயத்தில் இது இடம்பெற்றது.

சாய்ந்தமருது பொலிவேரியன் குடியேற்ற பிரதேசத்தினுடைய பல்வேறு பிரச்சினைகள் மையப்படுத்தப்பட்டு சில பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.



# இளைஞர்களுக்கான செயலமர்வு

(ஹஸ்பர்)

இளைஞர்களிடையே சமாதானம் , மத சுதந்திரம் மற்றும் நம்பிக்கையை மேம்படுத்தும் நோக்கிலான செயலமர்வு எழுத்தாணி பவுண்டேஷன் நிறுவனத் தின் ஏற்பாட்டில் திருகோணமலையில் தனியார் விடுதியில் இடம் பெற்றது.

எழுத்தாணி பவுண்டேஷன் அமைப்பின் பணிப்பாளர் வடமலை ராஜ்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வின் வளவாளர்களாகத் திருகோணமலை மாவட்டத்தின் இளம் வளவாளர்களான சுதர்சன் , உதயராஜ் தருணிக்கா, கே.ஜி. ஹர்ஷ ஆகியோர் கலந்து கொண்டனர்

சீனக்குடா மற்றும் அதனை அண்டிய கிராமங்களைச் சேர்ந்த மூவின இளைஞர்கள், மதத் தலைவர்கள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புகள், சமாதான நீதிவான்கள் இந்தச் செயலமர்வில் கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வின் போது அடிப்படை மனித உரிமைகள் மற்றும் நமது அடையாளங்களை பாதுகாத்தல், வன்முறை அற்ற தொடர்பாடல் திறன் போன்ற தலைப்புகளில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.



# ரொறன்ரோ தமிழ்ச் சங்கத்தின் இணையவழி கலந்துரையாடல்

கனடா , ரொறன்ரோ தமிழ்ச் சங்கம் நடத்தும் இணையவழி கலந்துரையாடல் எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கனடா , ரொறன்ரோ கலந்துரையாடல் இரவு 8 மணி தொடக்கம் 10 மணிவரை இடம்பெறும்.

17 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை ஒரு மணி தொடக்கம் 3 மணி வரை லண்டன் மக்களுக்காகவும் காலை 6.30 மணி தொடக்கம் 8.30 மணிவரை இலங்கை, இந்தியா மக்களுக்காகவும் பிற்பகல் 12 மணி தொடக்கம் 2 மணிவரை ஆஸ்திரேலியா சிட்னி மக்களுக்காகவும் இணையவழிக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

"அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கியம்" என்னும் தலைப்பில் எழுத்தாளர் லெ. முருகபூபதி உரையாற்றவுள்ளார்.

ஆர்வமுடையோர், zoom id - 84777257162, pass code - 554268 என்பதன் ஊடாக இணைந்து கொள்ள முடியும்.



# மாவை சேனாதிராஜாவின் சகிக்க முடியாத சுயநலம்

■ டி.பி.எஸ்.ஜெயராஜ்

கடந்த பத்து வருடங்களாக இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் பதவியை வகித்துவந்த மாவை சேனாதிராஜா ஜனவரி 21 திருகோணமலை நகர மண்டபத்தில் கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்கள் மத்தியில் நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்ட பின்னரும் நிலைவரம் எல்லாம் ஏதோ பழைய மாதிரியே இருப்பது போன்ற நினைப்பில் இருக்கிறார். கௌரவமான முறையில் பதவியில் இருந்து இறங்காமல் அவர் தொடர்ந்தும் தொங்கிக் கொண்டிருக்கிறார்.

தமிழரசுக் கட்சி 2022 ஆம் ஆண்டு வரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதான அங்கத்துவக் கட்சியாக இருந்தது. வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் உள்ள சகல ஐந்து மாவட்டங்களிலும் நாடாளு மன்றப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் ஒரேயொரு தமிழ்க் கட்சியாக தமிழரசு கட்சியே விளங்குகிறது. 'சமத்துவமான கட்சிகளில் முதலாவது' என்ற அந்தஸ்தை அனுபவித்துவந்த போதிலும், அந்த கட்சி அண்மைக்காலமாக நகைப்புக்கிடமானதாக மாறிவிட்டது. இந்த நிலைக்கு சேனாதிராஜாவின் சுயநல நடத்தை பெருமளவுக்கு பங்களிப்புச் செய்திருக்கிறது.

மாவை சேனாதிராஜா மொத்தமாக ஒரு ஐந்து வருடங்கள் நாடாளுமன்றத்தில் தேசியப்பட்டியல் உறுப்பினராக அங்கம் வகித்தார். பிறகு பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டு தெரிவாகி 20 வருடங்களாக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். அவர் மொத்தமாக 25 வருடங்களாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தார். 2014 தொடக்கம் 2024 வரை பத்து வருடங்களாக தமிழரசு கட்சியின் தலைவர் பதவியையும் அவர் வகித்தார். அதற்கு முதல் கட்சியின் பொதுச் செயலாளராகவும் செயற்பட்டார்.

தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் இரு பதவிக் காலங்களுக்கும் அதிகமாக பதவியில் தொடர்ந்து இருக்காத ஒரு பாரம்பரியம் கடைப்பிடிக்கப்படுகிறது. 2010 ஆம் ஆண்டில் தலைவராக வந்த முதுபெரும் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் இரு பதவிக்காலங்களுக்கு பிறகு 2014 ஆம் ஆண்டில் பதவியில் இருந்து இறங்கினார். அவர் தலைவராக இருந்த காலத்தில் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மாவை சேனாதிராஜா 2014 ஆம் ஆண்டு தலைவரானார்.

இரு பதவிக்காலங்களுக்கு பிறகு 2018 ஆம் ஆண்டில் தலைவர் பதவியில் இருந்து அவர் இறங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும், அவ்வாறு செய்யவில்லை. 2014 - 2024 காலப் பகுதியில் அவர் கட்சியின் தலைவர் பதவியில் தொடர்ந்தார். தமிழரசு கட்சியின் தலைவர் பதவியில் தொடர்ச்சியாக பத்து வருடங்களாக நீடித்த ஒரே அரசியல்வாதி மாவை சேனாதிராஜாவே ஆவார். கட்சியின் தாபகத் தலைவரான மதிப்புக்குரிய எஸ்.ஜே.வி. செல்வநாயகம் (தந்தை செல்வா) கூட அவ்வாறு பல வருடங்கள் தலைவராக இருந்ததில்லை.

### தமிழரசு கட்சியின் மகாநாடு

சுமார் ஒரு தசாப்தகாலமாக "நல்ல வழியோ,

தொடர்ச்சி ▼

# மாவை சேனாதிராஜாவின் சகிக்க முடியாத சுயநலம்

தொடர்ச்சி ▲

கெட்ட வழியோ எப்படியாவது" மாவை தமிழரசு கட்சியின் தலைவராக இருந்துவிட்டார். புதிய ஒரு தலைவர் கட்சியின் பொது மகாநாட்டில் வைத்து பொதுச் சபையினாலும் மத்திய செயற்குழுவினாலும் தெரிவு செய்யப்படுவதும் இரு வருடங்களுக்கு ஒரு முறை மகாநாடு நடத்தப்படுவதும் வழமை. ஆனால், 2014 மகாநாட்டில் மாவை சேனாதிராஜா தலைவராக தெரிவுசெய்யப்பட்ட பிறகு அடுத்த மகாநாடு 2019 ஆண்டில் மாத்திரமே நடத்தப்பட்டது. அந்த ஆண்டிலும் கட்சியின் தலைவராக மீண்டும் தெரிவான பிறகு இன்னொரு ஐந்து வருடங்களாக 2024 வரை அவரால் மகாநாட்டை ஒத்திவைக்கக்கூடியதாக இருந்தது.

2024 ஜனவரியில் மகாநாட்டை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டபோது தமிழரசு கட்சியின் தலைவர் பதவிக்கு உட்கட்சித் தேர்தல் ஒன்று நடக்கப்போகிறது என்பது தெளிவாகத் தெரிந்தது. தலைவரைத் தெரிவுசெய்வதற்கு தமிழரசு கட்சி தேர்தலைத் தவிர்த்து கருத்தொருமிப்பின் அடிப்படையிலான நடைமுறை ஒன்றே பாரம்பரியமாக கடைப்பிடிக்கப்பட்டுவந்த நிலையில் தலைவர் தெரிவுக்கு உட்கட்சி தேர்தல் ஒன்று நடத்தப்பட்டது இதுவே முதற்தடவை. போட்டித் தேர்தல் கட்சியைச் சிதறடித்துவிடும் என்ற அச்சம் கட்சி வட்டாரங்களில் நிலவியது. அந்த அச்சம் ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

இந்த அச்சத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்துவதில் நாட்டம் காட்டிய மாவை சேனாதிராஜா இடைக்காலத் தலைவராக தானே பதவியில் தொடர்ந்து கொண்டு மகாநாட்டை காலவரையறையின்றி ஒத்திவைக்கலாம் என்று யோசனையை முன் வைத்தார். அவரின் அதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பெரும்பாலான உறுப்பினர்கள் விரும்பியமையால் அவரது யோசனையை ஏற்பதற்கு எவரும் இருக்கவில்லை. அதனால் திட்டமிட்டபடி ஜனவரி 21 தமிழரசு தலைவர் தேர்தல் நடத்தப்பட்டது. இன்னொரு யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரனை சிவஞானம் சிறிதரன் 47 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

அதற்குப் பிறகு புதிய மத்திய செயற்குழுவும் கட்சியின் புதிய நிருவாக உறுப்பினர்களும் ஜனவரி 27 ஆம் திகதி தெரிவு செய்யப்படவிருந்தனர். மறுநாள் மகாநாட்டின் பொதுக்கூட்டத்தில் பழைய தலைவர் சம்பிரதாயபூர்வமாக பதவியில் இருந்து இறங்கவும் புதிய தலைவர் பொறுப்பை ஏற்பதற்கும் ஏற்பாடாகியிருந்தது. பொதுச்செயலாளர் உட்பட புதிய நிர்வாகிகளும் அன்றையதினம் அறிமுகம் செய்யப்படவிருந்தனர்.

தமிழரசுக் கட்சியின் யாப்பின் பிரகாரம் மத்திய செயற்குழு புதிதாக அமைக்கப்பட்டவுடன் பழைய தலைவரின் பதவிக்காலம் முடிவுக்கு வருகிறது. தலைவராக தெரிவுசெய்யப்பட்டவர் தன்னியல்பாகவே புதிய தலைவராகிவிடுவார். அடுத்த நாள் மகாநாட்டில் முறைப்படி பதவிப்பொறுப்பைக் கையளிப்பது என்பது வெறுமனே அடையாளபூர்வமான ஒரு சம்பிரதாய நிகழ்வு மாத்திரமே.

ஆனால், ஜனவரி 27 தமிழரசு கட்சிக்குள் குழப்பம் மூண்டது. ஆரம்பத்தில் சிறிதரன் சுமந்திரனுக்கு நேசக்கரம் நீட்டி இருவரும் சேர்ந்து பணியாற்றும் நிலை தோன்றியது. ஐம்பது உறுப்பினர்களைக் கொண்ட மத்திய செயற்குழு புதிதாக அமைக்கப்பட்டது. அடுத்து 2024 – 2026 காலப்பகுதிக்கான கட்சியின் புதிய நிருவாகிகள் பட்டியலும் இறுதிசெய்யப்பட்டது.

### பொதுச்செயலாளர்

இந்த நிருவாகிகளில் முக்கியமான செயலாளர் பதவியும் அடங்குகிறது. 16 நிருவாக உறுப்பினர்கள் பட்டியலும் மத்திய செயற்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்த பட்டியல் பொதுச்சபைக்கு ஒரு தீர்மானமாக முன்வைக்கப்பட்டது. புதிய தலைவர் சிறிதரனின் முன்மொழிவை குழு உறுப்பினரான பீட்டர் இளஞ்செழியன் வழிமொழிந்தார். அது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அடுத்து சில கலந்தாலோசனைக்கு பிறகு பொதுச்சபையும் அதை அங்கீகரித்தது.

தலைவர்,செயலாளர் என்ற முக்கிய பதவிகளை வடக்கையும் கிழக்கையும் சேர்ந்தவர்கள் பகிர்ந்து கொள்வது தமிழரசு கட்சியில் ஒரு நடைமுறையாகப் பின்பற்றுப்பட்டு வருகிறது. வட மகாணத்தைச் சேர்ந்தவர் தலைவராக இருந்தால் செயலாளர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவராக இருப்பார். கிழக்கு மாகாணத்தவர் தலைவராக இருந்தால் வட மாகாணத்தைச் சேர்ந்தவர் செயலாளராக இருப்பார். சிறிதரன் வடமாகாணத்தைச் சேர்ந்தவர் என்பதால் செயலாளர் கிழக்கு மாகாணத்தவராக இருக்க வேண்டும். சிறிதரனின் நெருங்கிய ஆதரவாளரான முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறீநேசன் செயலாளர் பதவி மீது கண்வைத்திருந்தார். ஆனால் அவருடன் சிறிதரன் பேசி திருகோணமலை மாவட்ட தமிழரசு கட்சி தலைவரான சண்முகம் குகதாசன் செயலாளராகுவதற்கு வழிவிட இணங்கவைத்தார்.

மதிய உணவுக்கு பிறகு கூட்டம் மீண்டும் தொடங்கியபோது மனமாற்றம் ஒன்று ஏற்பட்டுவிட்டது போன்று தெரிந்தது. தானே செயலாளராக வரவேண்டும் என்று தனது நலன் விரும்பிகள் விரும்புவதால் குகதாசனை செயலாளராக ஏற்றுக்கொள்ளமுடியாது என்று சிறீநேசன் கூறினார். சுமந்திரனின் ஆதரவாளராக குகதாசன் தவறாக கருதப்பட்டதால் சிறிதரனின் பல ஆதரவாளர்களும் அவரை கண்டனம் செய்தமையுடன் செயலாளராக அவரை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று கூறினர்.

பொதுச்செயலாளர் உட்பட முழு நிருவாகிகள் பட்டியலும் ஏற்கெனவே மத்திய செயற்குழுவினாலும் பொதுச்சபையினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததனால் இப்போது அதை வாக்கெடுப்புக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. 'தேர்தலை' நடத்திவைக்குமாறு பதவி விலகும் தலைலர் சேனாதிராஜாவும் புதிய தலைவர் சிறிதரனும் சுமந்திரனைக் கேட்டுக் கொண்டனர்.

பட்டியலை ஆதரிக்கிறார்களா அல்லது எதிர்க்கிறார்களா என்பதை பொதுச்சபை உறுப்பினர்கள் தங்கள் கைகளை உயர்த்தி வாக்களிப்பதன் மூலம் தெரிவிக்கலாம் என்று சுமந்திரன் கேட்டுக்கொண்டார்.

'ஆம் ' என்ற வாக்குகளும் 'இல்லை' என்ற வாக்குகளும் வரிசை வரிசையாக எண்ணப்பட்டன. சுமந்

தொடர்ச்சி ▼

# மாவை சேனாதிராஜாவின் சகிக்க முடியாத சுயநலம்

தொடர்ச்சி ▲

திரன் கைகளை எண்ணிக்கொண்டிருந்தபோது சிறிதரனின் உறுதியான ஆதரவாளரான நாவலனும் தனியாக கணக்கெடுத்தார். இருவரதும் எண்ணிக்கைகள் ஒன்றாகவே இருந்தன.

### சண்முகம் குகதாசன்

செயலாளர் சண்முகம் குகதாசன் உட்பட நிர்வாகிகள் பட்டியலுக்கு ஆதரவாக 112 வாக்குகளும் எதிராக 104 வாக்குகளும் கிடைத்தன. அதன் மூலமாக தமிழரசு கட்சியின் புதிய செயலாளர் குகதாசன் என்பது உறுதிசெய்யப்பட்டது. அதையடுத்து கூட்டம் முடிவுக்கு வந்தது. தமிழரசு கட்சியின் மகாநாடு மறுநாள் நடக்கவிருந்தது. புதிய தலைவரும் செயலாளரும் நிருவாகிகளும் பொதுமக்கள் முன்னிலையில் வைபவரீதியாக பதவிகளை ஏற்றுக்கொள்ள விருந்தனர்.

தமிழரசு கட்சியின் உறுப்பினர்கள் கலைந்து சென்றுகொண்டிருக்கையில், பொதுச்சபை உறுப்பினர்களில் ஒரு குழுவினர் மாவை சேனாதிராஜாவை அணுகி குகதாசனை செயலாளராக தங்களால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்று கூறினர். புதிய தேர்தல் ஒன்று நடத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்த அவர்கள் ஜனவரி 28 கட்சியின் மகாநாடு நடத்தப்படக்கூடாது என்று வலியுறுத்தினர்.

சேனாதிராஜா அப்போது 'விசித்திரமான' முறையில் நடந்துகொண்டார். புதிய தலைவர் சிறிதரனைக் கலந்தாலோசிக்காமல் முன்னாள் தலைவர் மாவை அடுத்த நாள் நடைபெறவிருந்த மகாநாடு கால வரையறையின்றி ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தார். செயலாளர் பதவி தொடர்பில் தகராறு ஒன்று இருப்பதால் புதிய தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்றும், அதற்குப் பிறகு மாத்திரமே மகாநாடு நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

இன்னமும் கூட தானே கட்சியின் தலைவர் என்ற மாயையில் மாவை இருக்கிறார் போன்று தெரிந்தது. மாகாநாட்டில் மாத்திரமே சிறிதரன் உத்தியோகபூர்வமாக பதவியேற்பார் என்று மாவை நினைத்தார் போன்று தோன்றியது. அதனால் மகாநாட்டை ஒத்திவைத்ததன் மூலம் அவர் தனது தலைவர் பதவிக்காலம் மேலும் நீடிக்கப்படுவதாக நினைத்தார்.

### சிறிதரனும் சுமந்திரனும்

சிறிதரனும் சுமந்திரனும் ஜனவரி 28 சேனாதிராஜாவை சந்தித்தனர். தமிழரசு கட்சியின் யாப்பின் பிரகாரம் உண்மை நிலைவரம் என்ன என்பதை ஜனாதிபதி சட்டத்தரணியான சுமந்திரன் அந்தச் சந்திப்பில் சேனாதிராஜாவுக்கு தெரியப்படுத்தினார். ஜனவரி 27 மத்திய செயற்குழு கூட்டத்துக்கு பிறகு சேனாதிராஜா தலைவர் பதவியில் இல்லாமற் போய்விட்டார் என்று சுமந்திரன் சுட்டாக்காட்டினார். மகாநாடு நடத்தப்படுமோ இல்லையோ சிறிதரன்தான் இப்போது கட்சியின் தலைவர். அதனால் சேனாதிராஜாவினால் ஒருதலைப்பட்சமாக மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது செல்லுபடியாகாது.

பொதுச் செயலாளராக குகதாசனின் தெரிவும் சட்டத்தில் செல்லுபடியாகும் என்றும் சுமந்திரன் வலியுறுத்திக்கூறினார். மத்திய செயற்குழு அதை ஏகமனதாக அங்கீகரித்திருந்தது. பொதுச்சபையும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. பிறகு வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஆதரவாக 112 வாக்குகளும் எதிராக 104 வாக்குகளும் கிடைத்தன. அதனால், புதிய செயலாளரைத் தெரிவுசெய்யவேண்டியிருக்கிறது என்ற சாக்குப்போக்கில் மகாநாட்டை சேனாதிராஜா ஒத்திவைத்தமை சரியானதல்ல.

சுமந்திரனின் விளக்கத்தை சேனாதிராஜா ஏற்றுக் கொள்ளவில்லை. தானே இன்னமும் கட்சியின் தலைவர் என்ற நிலைப்பாட்டை அவர் எடுத்தார். தனது மகனின் திருமணத்துக்காக சிங்கப்பூர் செல்வதாகவும் பெப்ரவரி 10 ஆம் திகதியே நாடு திரும்ப விருப்பதாகவும் அவர் கூறினார். நாடு திரும்பியதும் பொதுச்சபையைக் கூட்டிப் பிரச்சினையைத் தீர்ப்பதாக அவர் கூறியது சிறிதரனுக்கும் ஏற்புடையதாக இருந்தது. சிறீநேசனை ஆதரிக்கும் தனது ஆதரவாளர்களின் நெருக்குதலின் கீழ் சிறிதரன் இருந்தார்.

சேனாதிராஜாவின் யோசனை தமிழரசு கட்சியின் யாப்புக்கு முரணானது என்று சுமந்திரன் அப்போது கூறினார். அதற்கு சேனாதிராஜா "கட்சியின் யாப்பின் பிரகாரம் எல்லாவேளையிலும் நடக்கவேண்டும் என்றில்லை" என்று பதிலளித்தார். கட்சியின் யாப்பை மீறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அதனால் சட்டரீதியான விளைவுகள் ஏற்படலாம் என்றும் சுமந்திரன் கூறிவைத்தார். வார்த்தைகளில் கூறாமல் சிறிதரன் குறிப்பால் உணர்த்திய ஆதரவுடன் மாவை சுமந்திரனின் ஆலோசனையை அலட்சியம் செய்துவிட்டு சிங்கப்பூருக்கு பறந்துவிட்டார்.

### சட்டரீதியான நிலைப்பாடு

அதைத் தொடர்ந்து தமிழரசு கட்சியின் தலைவர் மற்றும் செயலாளர் பற்றிய சட்டரீதியான நிலைப்பாட்டை விளக்கி சுமந்திரன் சிறிதரனுக்கு விரிவான கடிதம் ஒன்றை எழுதினார். சிறிதரனே தற்போது தலைவர் என்றும் சாத்தியமானளவு விரைவாக அவர் வைபவரீதியாகப் பதவியை ஏற்கவேண்டும் என்றும் சுமந்திரன் கடிதத்தில் வலியுறுத்தினார். கடிதம் ஊடகங்களுக்கும் வெளியிடப்பட்டது. தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். சிவராஜாவுக்கு சுமந்திரன் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றையும் வழங்கினார். 'நெற்றிக்கண்' அலைவரிசையில் ஒளிபரப்பான அந்த நேர்காணலில் அவர் தமிழரசு கட்சியின் சர்ச்சைக்குரிய விவகாரங்கள் தொடர்பில் சட்டரீதியான நிலைப்பாட்டை மிகவும் விரிவாக விளக்கினார்.

அடிப்படை தமிழ் மொழியறிவும் கொஞ்சமேனும் பொது அறிவும் இருக்கும் எவரும் சுமந்திரனின் கடிதத்தையும் வாசித்து தொலைக்காட்சி நேர்காணலையும் பார்த்தால் தமிழரசு கட்சியின் தலைவர் மற்றும் செயலாளர் தெரிவு தொடர்பிலான நற்போதைய சட்ட அடிப்படையிலான நிலைப்பாட்டை எளிதாக விளங்கிக் கொள்ளமுடியும். ஆனால் மாவை அநாவசியமாக பிரச்சினையைத் தேடிக்கொண்டார் போன்று தெரிகிறது. செயலாளர் பதவி தொடர்பிலான தகராறு நீண்ட ஒரு காலத்துக்கு தானே தலைவர் பதவியில் தொடருவதற்கு வாய்ப்பாக அமையும் என்ற மருட்சியில் அவர் இருக்கிறார். சாத்தியமானளவு காலத்துக்கு கட்சியின் அதிகாரத்தை தன்வசம் வைத்திருப்பதில் மாவைக்கு இருக்கும் பேராசையை

தொடர்ச்சி ▼

# மாவை சேனாதிராஜாவின் சகிக்க முடியாத சுயநலம்

**தொடர்ச்சி ▲**

அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அவரது நடத்தை கண்டிக்கத்தக்கது என்றாலும் விளங்கிக் கொள்ளக்கூடியதே.

ஒருதலைப்பட்சமான தனது நடவடிக்கையின் விளைவாக ஏற்படக்கூடிய சட்டரீதியான விளைவுகளை சேனாதிராஜா புரிந்துகொள்ளவில்லை. சட்டரீதியான தலைவராக இல்லாதபோது தமிழரசு கட்சியின் தலைவரின் அதிகாரங்களையும் கடமைப் பொறுப் புக்களையும் கையகப்படுத்துவது சாதாரண விடயம் அல்ல. தமிழரசு கட்சியின் யாப்பை மீறுவதற்கு தயாராயிருப்பது போன்று பேசுவது மேலும் மோச மானதாகும்.

இந்த கட்டத்தில் பெரிதாக ஊகங்களைச் செய்ய வேண்டியதில்லை, ஆனால் விவகாரம் நீதிமன்றத் துக்குப் போனால் சேனாதிராஜா பெரும் ஆபத்தில் சிக்கிக்கொள்ளக்கூடும். மகாநாட்டை திடீரென்று ஒத்திவைத்ததன் விளைவாக ஏற்கெனவே கட்சிக்கு பெரும் பணவிரயம் ஏற்பட்டிருக்கிறது. அதிகாரம் இல்லாமல் மகாநாட்டை சட்டவிரோதமாக ஒத்தி வைத்ததன் மூலமா ஏற்பட்ட இழப்புக்களை பொறுப பேற்கவேண்டிய நிலைக்கு மாவை தள்ளப்படலாம். மேலும் தலைவர் தெரிவு உட்பட கட்சியின் தேர்தல் முழுவதுமே செல்லுபடியற்றது என்று பிரகடனம் செய்யப்படக்கூடும். அவ்வாறு நேர்ந்தால் அதற்கு மாவையே பிரதான காரணம்.

ஜனவரி 21 கட்சி தலைவர் தேர்தல் நடைபெற்றபோது சேனாதிராஜாவே தலைவராக இருந்தார். மத்திய செயற்குழுவுக்கு மேலும் 18 உறுப்பினர்களை நியமிப் பதற்கு அவர் தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார். அது கட்சியின் யாப்புக்கு எதிரானது. ஆனால் கட்சி யாப்பின் விதிமுறைகளை பின்பற்றுவ தில் நம்பிக்கை இல்லாத சேனாதிராஜா அந்த நியம னங்களை தன்னெண்ணப்படி அடாத்தாகச் செய்தார்.

**மகன் கலையமுதன்**

மத்திய செயற்குழுவுக்கு சட்டவிரோதமாக நியமிக் கப்பட்டவர்களில் சேனாதிராஜாவின் மகன் கலைய முதனும் அவரது மாமியார் சசிகலா ரவிராஜ்/ம் அடங்குவர். சசிகலா கொலை செய்யப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் மனைவியாவார். அவர்களின் மகள் பிரவீணாவையே கலையமுதன் மணம் முடித்திருக்கிறார்.

இரு முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் மகனுக்கும் மகளுக்கும் இடை யிலான பந்தம் குடும்பத்தாருக்கு ஆதரவும் சலுகையும் அளிப்பதாக மாவைக்கு எதிராக குற்றச்சாட்டு கிளம்பு வதற்கு வழிவகுத்திருக்கிறது. புதிய ஒரு அரசியல் வம்சத்தை உருவாக்கும் ஒரு முயற்சியாக சேனாதி ராஜா தனது மகனை அரசியலில் ஊக்குவிக்கிறார் என்று அவருக்கு எதிரானவர்கள் ஏற்கெனவே குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் உறுப்பினராக கலையமுதன் தெரிவுசெய்யப்பட்டார். அந்த பிரதேச சபையின் தலைவராக அவரைத் தெரிவு செய்வதற்கு மேற் கொள்ளப்பட்ட முயற்சியும் தமிழரசு கட்சியின் இளை ஞர் முன்னணியின் தலைவராக கலையமுதனை கொண்டுவருவதற்கான இன்னொரு முயற்சியும் முறியடிக்கப்பட்டன. சேனாதிராஜாவும் சசிகலாவும் 2020 நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டனர். எனினும் வெற்றிபெறவில்லை. கலையமுதன் வலிகாமம் வடக்கில் வீதியொன்றுக்கு தனது பெயரைச் சூட்டவைத்திருக்கிறார் என்பதும் கவனிக்கத்தக்கது.

அரசியலில் சேனாதிராஜாவின் சுயநலச் செயல்களுக்கு பல சம்பவங்களைக் கூறமுடியும். 2020 நாடாளுமன்றத் தேர்தலில் உதயன் பத்திரிகை உரிமையாளர் சரவணபவனுடன் அணிசேர்ந்து கொண்டு தமிழரசு கட்சியின் சகபாடி வேட்பாளர்களுக்கு எதிராக வேலை செய்தது அவற்றில் ஒன்று. ஏனைய தமிழ்க்கட்சிகளுடன் சேர்ந்துகொண்டு தனது சொந்தத் தமிழரசு கட்சியின் நலன்களுக்கு எதிராக சேனாதிராஜா அடிக்கடி துரோகத்தனமாகச் செயற்பட்டிருக்கிறார். இன்பதுன்பம் கலந்த நீண்டகால அரசியல் வாழ்வொன்றில் சேனாதிராஜாவுக்கு நிலையான நண்பர்களோ அல்லது எதிரிகளோ இல்லை. ஆனால், ஒரு சுயநலத்துடன் கூடிய நிலையான நலன்கள் இருக்கின்றன.

**மாவையின் கடந்த காலம்**

தமிழரசு கட்சியில் மாவை சேனாதிராஜாவின் கடந்தகாலத்தை இரு பகுதிகளாக பிரிக்கலாம். முத லாவது பகுதி அவரின் வாழ்வின் தொடக்ககாலத்துடன் தொடர்புடையது. இளைஞனாக பல போராட்டங்களில் பங்கேற்று அரசியல் காரணங்களுக்காக சிறைசென்ற அவர் கணிசமான தியாகங்களைச் செய்திருக்கிறார். இந்தியாவில் சுய அஞ்ஞாதவாசம் செய்த காலப்பகுதி பல்வேறு வழிகளில் கடுமையான இடர்பாடுகள் நிறைந்ததாக இருந்தது. அதை நான் நேரடியாகக் கண்டேன்.

அவரது வாழ்வின் இரண்டாவது பகுதி வித்தி யாசமானது. இந்த பகுதியில் சேனாதிராஜா பழைய காலத்து இலட்சியவாதியாக நடந்துகொள்ளவில்லை. அரசியலில் உயர்மட்டத்தில் இருப்பதற்காக எதையும் செய்யத் தயாராயிருக்கும் ஒரு சுயநல அரசியல் வாதியாக மாறினார். அமிர்தலிங்கம் கொலை செய் யப்பட்டமையை அடுத்துத் தேசியப்பட்டியல் நாடா ளுமன்ற உறுப்பினர் பதவியை தனக்கு தரவேண்டும் என்று கோரியது தொடக்கம் 2020 தேர்தல் தோல் விக்கு பிறகு தேசியப்பட்டியல் உறுப்பினராக வரு வதற்கு அருவருக்கத்தக்க முறையில் மேற்கொண்ட முயற்சி வரை அரசியல் பதவியைப் பெறுவதில் தனக்கு இருக்கும் சுயநல வேட்கையை சேனாதிராஜா வெளிக்காட்டினார்.

அவர் இவ்வாறு நடந்துகொள்வதற்கு கட்சியும் கட்சி உறுப்பினர்களும் ஏன் இடங்கொடுத்தார்கள் என்ற கேள்வி எழுகிறது. பொறுத்துக் கொள்ளமுடியாத சுயநலத்தை ஏன் அவர்கள் பொறுத்துக் கொண் டார்கள்? அதற்கு பதில் சேனாதிராஜாவின் கடந்த காலமே. தியாகங்கள் நிறைந்த அவரின் இளமைக் காலப் போராட்ட வாழ்வை நினைவில் வைத்திருப்ப வர்கள் அவரைக் கண்டிக்கவோ விமர்சனம் செய்யவோ தயங்குகிறார்கள். தற்போது அவர் எவ்வாறு நடந்துகொண்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் கடந்த காலத்தைப் பற்றியே நினைக்கும் அவர்கள் தொடர்ந்தும் அவர் மீது அனுதாபம் காட்டுகிறார்கள். இந்த கட்டுரையாளரும் பொறுத்துக்கொள்ள முடியாத நிலை வரும்வரை 'சேனாதி அண்ணை' மீது அன்பு கொண்டிருந்தவர்களில் ஒருவரே!

**நன்றி:**
**'பினான்ஸியல் டைம்ஸ்'**



# உலக ஈர நில தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக ஈர நில தினத்தை முன்னிட்டு பெத்தகனா ஈர நிலங்கள் திட்டத்தின் முதல் விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த ஈரநில விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் சிலோன் தேயிலை நிறுவனத்தால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள்இ சிறுவர்கள் மற்றும் ஒட்டுமொத்த இயற்கை ஆர்வலர்கள் என்று மூன்று தரப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பெட்டகனா ஈர நிலங்களின் தனித்துவமான பின்னணியில் வேடிக்கையான மற்றும் தகவல் தரும் கதையை உருவாக்கியது. சிறுவர்கள் கலை அமர்வு மூலம் அனைத்து தகவல்களையும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

சுமார் 25 ஹெக்டேயர் பரப்புள்ள இந்த ஈரநிலம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் சுற்றுச் சூழல் மற்றும் நிலப்பரப்பு ஆகியன உலக வங்கியின் நிதியுதவியுடன் இயற்கையான இந்த சூழலை பாதுகாக்கின்றது.

இந்த நிகழ்வில் சொத்து மற்றும் காணி அபிவிருத்திக்கான பிரதி பணிப்பாளர் நாயகம் ஈ.ஏ.சி.பிரியசாந்தஇ நகர அபி



விருத்தி அதிகார சபையின் சுற்று சூழலும் நிலப்பரப்புக்கும் பொறுப்பான பணிப்பாளர் திருமதி சந்தனா கலுபஹன உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# பலளுவெவ கிராமத்தில் பொறியியல் துறைக்கு தெரிவாகியுள்ள மாணவனுக்குக் கௌரவிப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அநுராதபுர மாவட்டத்திலுள்ள பலளுவெவ கிராமத்தில் முதன் முதலாக பொறியியல் பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவன் மற்றும் கலைப் பீடத்துக்கு பலளுவெவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஐந்து மாணவிகள் ஆகியோரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் றொலெக்ஸ் விளையாட்டுக்கழக தலைவர் றில்மி பளீல் தலைமையில் றொலெக்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

றொலெக்ஸ் விளையாட்டுக்கழகமும் குட் பிரண்ட்ஸ் நண்பர்கள் குழுவும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த இந்த நிகழ்வில் பலளுவெவ பள்ளிவாசல்



பரிபாலன சபைத்தலைவர் என்.ஏ.எம். றமீஸ், திக்கந்தியாவ பள்ளிவாசல் தலைவர் எம்.சாதிக், கெக்கிராவ கிரிக்கட் கவுன்ஸிலில் செயலாளர் ஏ.எம். டீ. பாயிஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளருக்கு செயலகத்தில் பிரியாவிடை நிகழ்வு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளராகக் கடமையாற்றிய இலங்கை நிர்வாக சேவை அதிகாரி எஸ்.புவனேந்திரன் பதுளை மாவட்ட லுணுகல பிரதேச செயலாளராக பதவி உயர் பெற்றதை அடுத்து மாவட்ட செயலகத்தில் அவருக்கான பிரியாவிடை நிகழ்வு வியாழக்கிழமை (08) இடம் பெற்றது.

மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் இடம் பெற்ற இந்தப் பிரியாவிடை நிகழ்வில், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் புவனேந்திரனுக்கு மகத்தான பிரியாவிடை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலகத்தின் பதவி நிலை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டு புதிய பிரதேச செயலாளருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை நிறைவு செய்த புவனேந்திரன், அங்கு உதவி விரிவுரையாளராக ஒரு வருடம் கடமையாற்றியுள்ளார்.

இக்காலப் பகுதியில் இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவான இவர் தனது 27 ஆவது வயதில் உதவிப் பிரதேச செயலாளராக பதுளை மாவட்ட பசறை பிரதேச செயலகத்தில் கடமை யாற்றியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளராக கடமையாற்றி, கடந்த 2021 இல் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

தற்பொழுது தனது 37 ஆவது வயதில் பிரதேச செயலாளராகப் பதவி உயர்வு பெற்று லுணுகல பிரதேச செயலாளராக வெள்ளிக்கிழமை (09) கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பால்நிலை சமத்துவ செயலமர்வு

( வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பால்நிலை சமத்துவம் மற்றும் உளநலன், உளவியல் நடத்தை சார் அணுகுமுறைகள் தொடர்பான செயலமர்வு நடைபெற்றது.

அமைப்பின் தலைவி திருமதி கலைவாணி தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக உளநல ஆற்றுப்படுத்துனர் ஏ.சுதர்சன் விளக்க உரையாற்றினார்.

இதில் அமைப்பின் இணைப்பாளர் மற்றும் கள உத்தியோகத்தர், திட்ட இணைப்பாளர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.









# பா.ஜ.க. ஆட்சியில் புதிய நாடாளுமன்றம் பாரம்பரிய முறையில் கட்டப்பட்டுள்ளது

## பிரதமர் மோடி பெருமிதம்

"பா.ஜ.க. ஆட்சிக் காலத்தில் புதிய நாடாளுமன்றம் கம்பீரமாக கட்டப்பட்டு உள்ளது. நாட்டின் பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில் அவையில் செங்கோல் நிறுவப்பட்டு இருக்கிறது."

– இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

17 ஆவது மக்களவையின் சாதனைகளை பிரதமர் நரேந்திர மோடி பட்டியலிட்டு நேற்று உரையாற்றினார். இதைத் தொடர்ந்து நாடாளுமன்ற வரவு செலவு திட்ட கூட்டத் தொடர் நேற்றுடன் நிறைவு பெற்றது. இதன்மூலம் 17 ஆவது மக்களவை நிறைவடைந்தது.

வரவு செலவு திட்ட கூட்டத்தொடரின் கடைசி நாளான நேற்று அயோத்தி ராமர் கோயில் தொடர்பான தீர்மானம் மீது மக்களவையில் விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தின் இறுதியில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 5 ஆண்டுகள் சீர்திருத்தம், செயலாக்கம், மாற்றம் என்ற அடிப்படையில் மக்களவை செயல்பட்டது. மிக நீண்ட காலமாக புதிய நாடாளுமன்றம் கட்டப்பட வேண்டும் என்று விவாதிக்கப்பட்டது. ஆனால் முந்தைய ஆட்சிகளில் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

பா.ஜ.க. ஆட்சிக் காலத்தில் புதிய நாடாளுமன்றம் கம்பீரமாக கட்டப்பட்டு உள்ளது. நாட்டின் பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில் அவையில் செங்கோல் நிறுவப்பட்டு இருக்கிறது. இதன்மூலம் இந்தியா சுதந்திரம் அடைந்த தருணத்தை எப்போதும் நினைவுகூர முடியும்.

நாடு முழுவதும் ஜி-20 கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் டில்லியில் ஜி-20 உச்சி மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டன. இதன்மூலம் இந்தியாவின் வலிமை, அடையாளம் உலகுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

நாடு முழுவதும் 75 ஆவது சுதந்திர தினம் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. 17 ஆவது மக்களவையின் முதல் கூட்டத்தில் வரலாற்று சாதனையாக 30 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. 370 ஆவது சட்டப்பிரிவு நீக்கப்பட்டது. இதன்மூலம் காஷ்மீர் மக்களுக்கு சமூக நீதி வழங்கப்பட்டது.

மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்க வகை செய்யும் நாரி சக்தி வந்தன் சட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. முஸ்லிம் பெண்களுக்கு நீதி கிடைக்க வகை செய்யும் முத்தலாக் தடை சட்டம் நிறைவேற்றப்பட்டது." – என்றார்.

# பிரதமர் நரேந்திர மோடி 13 ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு செல்கிறார்

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி 2 நாள் பயணமாக நாளை மறுதினம் செல்லவுள்ளார். அப்போது அங்கு கட்டப்பட்டுள்ள சுவாமி நாராயண் கோயிலை பிரதமர் திறந்துவைக்கவுள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி, ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபி சென்றிருந்தபோது, பட்டத்து இளவரசர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் அபுதாபியில் சுவாமி நாராயண் கோயில் கட்டுவதற்கு 13.5 ஏக்கர் நிலத்தை தானமாக கொடுத்தார். மேலும், கூடுதலாக 13.5 ஏக்கர் நிலத்தை ஐக்கிய அரபுஅமீரக அரசு கடந்த 2019 ஆம் ஆண்டு வழங்கியது.

இதையடுத்து 27 ஏக்கர் நிலத்தில் சுவாமி நாராயண் கோயில் கட்ட நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். இந்தக் கோயில் இளஞ்சிவப்பு ராஜஸ்தான் மணற்கல் மற்றும் வெள்ளை இத்தாலி மார்பிள் கற்களால் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

கோயிலில் மொத்தம் 7 கோபுரங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. நிலநடுக்கம், மற்றும் அதீத வெப்பத்தினால் கோயில் பாதிக்கப்படாமல் இருக்க 100 சென்சார்கள் கோயிலுக்கு அடியில் பொருத்தப்பட்டிருக்கிறது. இக்கோயில் மொத்தமாக 400 மில்லியன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் திர்ஹாம் செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.

போச்சசன்வாசி அக்சர் புருஷோத்தம் ஸ்வாமிநாராயண்



சன்ஸ்தா அமைப்பு சார்பில் இந்த சுவாமி நாராயண் கோயில் கட்டப்பட்டிருக்கிறது.

இந்தக் கோயிலை திறந்துவைப்பதற்காக பிரதமர் மோடி எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் ஐக்கிய அரபு இராச்சியம் செல்கிறார். அபுதாபியில் அமைந்துள்ள முதல் இந்துக் கோயில் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இரு நாள் பயணத்தின்போது ஐக்கிய அரபு இராச்சிய இளவரசர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானை, பிரதமர் மோடி சந்தித்துப் பேசவுள்ளார்.

மேலும் அமீரகத்தின் துணை ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புத்துறை அமைச்சரையும் பிரதமர் மோடி சந்தித்துப் பேசவுள்ளார்." என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# விவசாயிகள் பேரணி அறிவிப்பு எதிரொலி: ஹரியாணா எல்லைப் பகுதிகள் மூடப்பட்டன

இந்தியா முழுவதும் உள்ள 200 இற்கும் மேற்பட்ட விவசாய சங்கங்கள் நாளை மறுதினம் மத்திய அரசுக்கு எதிராக பேரணி நடத்துவதற்கு தீர்மானித்துள்ளன .

இந்த நிலையில், ஹரியாணா மாநிலத்தின் எல்லைப் பகுதிகள் மூடப்பட்டுள்ளன. மேலும் பல்வேறு மாவட்டங்களில் இணைய சேவை துண்டிக்கப்பட்டுள்ளது.

பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதி செய்யும் புதிய சட்டத்தை இயற்றுவது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சம்யுக்தா கிசான் மோர்ச்சா, கிசான் மஸ்தூர் மோர்ச்சா உள்ளிட்ட 200 இற்கும் அதிகமான விவசாய சங்கங்கள் நாளை மறுதினம் 13 ஆம் திகதி ‘டெல்லி சலோ’ என்ற பெயரில் மத்திய அரசுக்கு எதிராக டெல்லியில் பேரணி நடத்தப் போவதாக அறிவித்துள்ளன.

இதற்காக இந்தியா முழுவதும் உள்ள விவசாயிகள் பலரும் டில்லியை நோக்கி புறப்பட்டு வருகின்றனர்.

இதன் எதிரொலியாக, ஹரியாணா – பஞ்சாப் எல்லையில் அமைந்திருக்கும் அம்பாலா, அம்பாலா, குருஷேத்ரா, கைதல், ஜிந்த், ஹிசார், ஃபதேஹாபாத் மற்றும் சிர்சா ஆகிய மாவட்டங்களில் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை இணையம் மற்றும் எஸ்.எம்.எஸ். சேவைகள் துண்டிக்கப்படுகின்றன என ஹரியாணா அரசு தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை இன்று அதிகாலை 6 மணி முதல் 13 ஆம் திகதி இரவு 11.59 மணி வரை அமுலில் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் எல்லைப் பகுதிகள் ஏராளமான பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பேரணிக்கு செல்பவர்களை தடுக்கும் வகையில் தடுப்பு வேலிகள், மணல் மூட்டைகளை ஆகியவற்றையும் அந்தந்த மாவட்ட நிர்வாகங்கள் அமைத்துள்ளன.

பேரணியின் போது பொதுச் சொத்துகளுக்கு பாதிப்பு ஏற்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர். மேலும் பொதுமக்கள் அவசர தேவைகள் இன்றி பஞ்சாப் மாநிலத்துக்கு பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்றும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# சென்னையில் அண்ணாமலையின் நடைபயணத்துக்கு அனுமதி மறுப்பு

சென்னையில் அண்ணாமலையின் நடைபயணத்துக்கு அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

ஊழலுக்கு எதிராகவும், மக்களவைத் தேர்தலையொட்டியும் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தமிழகம் முழுவதும் ‘என்மண் என் மக்கள்’ எனும் பெயரில்நடைபயணம் மேற்கொண்டு வருகிறார்.


நடைபயணத்தின்போது மக்களைச் சந்திக்கும் அண்ணாமலை, தி.மு.க – அ.தி.மு.கவை விமர்சிப்பதோடு, தமிழகத்துக்கு மத்திய அரசுகொண்டு வந்துள்ள திட்டங்களையும் எடுத்தக் கூறி மக்களவைத் தேர்தலுக்கு வாக்கு சேகரித்து வருகிறார்.

இந்த நிலையில், நடைபயணத்தின் முடிவில், அமைந்தகரை செயின்ட் ஜோர்ஜ் திடலில் பொதுக்கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



ஆனால், அண்ணாமலையின் நடைபயணத்துக்கு பொலிஸார் அனுமதி வழங்க மறுத்துவிட்டனர். மேலும், போக்குவரத்து நெரிசல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், அமைந்தகரையில் பொதுக்கூட்டம் நடத்தவும் அனுமதி மறுக்கப்பட்டது.

அதேநேரம், பொதுக்கூட்டத்தை தங்கசாலையில் நடத்துவதற்கு பொலிஸ் அனுமதி வழங்கி உள்ளது. இதையடுத்து, இன்று மாலை பா.ஜ.க. பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இதில், ஜெ.பி.நட்டா, அண்ணாமலை, எல். முருகன், சுதாகர் ரெட்டி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.



# பாகிஸ்தான் தேர்தலில் தொடரும் இழுபறி: கூட்டணி ஆட்சிக்கு நவாஸ் ஷெரீப் முயற்சி

பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தலில் எந்த கட்சிக்கும் அறுதி பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதையடுத்து, கூட்டணி ஆட்சி அமைக்க முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெ ரீப் முயற்சி மேற்கொண்டுள்ளார். இதற்கு பாகிஸ்தான் ராணுவம் ஆதரவு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்றம் மற்றும் மாகாண சட்டப்பேரவைகளுக்கு தேர்தல்கள் இடம்பெற்றன. பதிவான வாக்குகளை எண்ணும் பணி நேற்று முன்தினம் தொடங்கியது.

நேற்று காலை நிலவரப்படி, 265 இல் 250 தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கை முடிவடைந்திருந்தது. முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெக்ரீக்-இ-இன்சாஃப் கட்சி தேர்தலில் போட்டியிட தடைவிதிக்கப்பட்டதால், அதன் தலைவர்கள் சுயேட்சை வேட்பாளர்களாக போட்டி யிட்டனர்.

பி.டி.ஐ. ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளர்கள் 99 இடங்களில் வெற்றி பெற்றனர். முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-என் கட்சி (பி.எம். எல்-என்) 71 இடங்களிலும், பிலாவல் புட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி (பி.பி.பி.) 53 இடங்களிலும் வெற்றி பெற்றிருந்தது. முத்தாஹிடா குவாமி இயக்கம் (எம்.கியூ. எம்) கட்சி 17 இடங்களிலும், ஏனைய இடங்களில் சிறு கட்சிகளும் வென்றன.

பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தலில் எந்த கட்சிக்கும் அறுதி பெரும்பான்மை இல்லாததால், அரசியல் கட்சிகள் கூட்டணி ஆட்சிக்கு முன்வர வேண்டும் என நவாஸ் ஷெ ரீப் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து பிலாவல் புட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியினருடன், நவாஸ் கட்சியினர் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். நவாஸ் ஷெரீப்பின் இந்த முயற்சிக்கு பாகிஸ்தான் இராணுவத்தின் தலைமை தளபதி ஜெனரல் ஆஸிம் முனிர் ஆதரவு தெரிவித்துள்ளார். ஜனநாயக சக்திகள் அனைத்தும் ஒன்றிணைத்து ஆட்சி அமைக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.



# ஹவாய் தீவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

அமெரிக்காவின் ஹவாய் தீவுப் புகுதிகளில் சக்தி வாயந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கம் தொடரபில், அந்த நாட்டு புவியியல் ஆய்வு மையம் வெளி யிட்டுள்ள அறிக்கையில், ஹவாய் தீவுக் கூட்டத்தின் பிக் ஐலண்ட் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கமானது, ரிக்டர் அளவுகோலில் 5.7 அலகுகளாகப் பதிவாகியுள்ளது.

அதேவேளை, நிலநடுக்கத்தினால் உயிர்ச் சேதமோ, பொருள் சேதமோ ஏற் பட்டதாக தகவல்கள் வெளியாகவில்லை.

அத்துடன், சுனாமி அபாய எச்ச ரிக்கையும் விடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது.



# ரஷ்யாவின் ட்ரோன் தாக்குதலில் குழந்தைகள் உட்பட 7 பேர் பலி!

உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஆளில்லா விமான தாக்குதலில் 07 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் மூன்று குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர் என வெளிநாட்டுஊடகங்கள்தெரிவிக்கின்றன.

தாக்குதல் காரணமாக 14 வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

தீ பரவல் காரணமாக வீடுகளில் தங்கியிருந்த மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல உக்ரைன் பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எடுத்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.





# சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக மாணவியின் ஒளிப்படக் கண்காட்சி!

(பழுவூரான்)

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் மூன்றாம் வருட கட்புலமும், தொழில்நுட்பமும் பிரிவில் கல்வி பயிலும் மாணவி டிலோச்சினி ரவிச்சந்திரனின் காட்டு விலங்குகள் ஒளிப்படக் கண்காட்சி வியாழக்கிழமை (08) கற்கைகள் நிறுவகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கண்காட்சி மட்டக்களப்பு கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடியால் தொடக்கி வைக்கப்பட்டது.

கட்புலமும் தொழில்நுட்பமும் கலைப் பிரிவில் மூன்றாம் வருடத்தில் கல்வி பயிலும் மாணவி டிலோச்சினி தனது தனிக் கண்காட்சியாக இதனை ஒழுங்குபடுத்தியிருந்தார்.

பல்வேறு வகையான காட்டுவிலங்குகள், அவற்றின் வாழ்வியல், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட விடயங்களை வெளிக்காட்டும் வகையிலான ஒளிப்படங்கள் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

இதற்காக பொத்துவில், குமண, ஹபரண மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களுக்குச் சென்று அங்குள்ள காட்டு விலங்குகளைத் தான் பதிவு செய்திருந்தார் என்று இதன்போது அவர் தெரிவித்தார்.

சிரேஷ்ட விரிவுரையாளர் சு.சிவரெத்தினம், கட்புலமும் தொழில்நுட்பமும் கலைகள் துறையின் தலைவர் ரமேஸ் பிரகாஸ், கண்காட்சியின் ஒழுங்கமைப்பாளர் கோகுலரமணன் மற்றும் விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோர் இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

இந்த கண்காட்சியானது 21 ஆம் திகதி வரைக்கும் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.







# வாழ்வாதாரக் கடனுதவிகள் வழங்கிவைப்பு!

(பழுவூரான்)

ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி பிரிவினரால் ஐயன்கேணி விபுலானந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்துவர்களில் தெரிவு செய்யப்பட்ட 67 பயனாளிகளுக்கு வாழ்வாதாரக் கடனாக சங்க நிதியினூடாக 14 லட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபா சுழலும் கடன் திட்டத்தின் கீழ் வழங்கிவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வானது பிரதேச செயலாளர் கோ.தனபாலசுந்தரத்தின் அனுமதியின் கீழ் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.அகிலேஸ்வரனின் மேற்பார்வையில் கிராம அபிவிருத்தி திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.ஸப்றி ஹசனால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரிவுக்கான கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எனப் பலர் கலந்து கொண்டு கடனுதவிகளை வழங்கினர்.



# கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் பொங்கல் விழா நிகழ்வுகள்!

(பழுவூரான்)

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக சமூகம் ஒன்றிணைந்து நடத்திய பொங்கல் விழா வியாழக்கிழமை (08) கிழக்குப் பல்கலைக்கழக விளையட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் கலந்து கொண்டார்.

இதன்போது 108 பானைகளில் பொங்கல் பொங்கப்பட்டதோடு, பாரம்பரிய விளையாட்டுக்கள் மற்றும் கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.

இந்தப் பொங்கல் விழாவில் பிரதி உபவேந்தர் கலாநிதி பிரபாகரன், கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் வினோபா, விவசாயபீட பீடாதிபதி பேராசிரியர் திருமதி புனிதா பிரேமானந்தராஜா, வர்த்தக, முகாமைத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் ராஜேஸ்வரன், கலை கலாசாரபீட பீடாதிபதி கலாநிதி குணபாலசிங்கம், பல்கலைக்கழக பதிவாளர் பகிரதன், நிதியாளர் பாரிஸ் மற்றும் கல்விசார், நிர்வாக, கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்களின் நடனம், களி இசை, குழு நடனம், குழுப் பாடல், சிங்களப் பாடல், கண்டிய நடனம் உட்பட பல்வேறு நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.









# தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16 ஆவது பட்டமளிப்பு விழா ஆரம்பம்

**(பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர்)**

இலங்கை தென் கிழக்கு பல்கலைக் கழகத்தின் 16 ஆவது பட்டமளிப்பு விழா நேற்று (10) பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் மிக கோலாகலமாக ஆரம்பமானது.

இந்த நிகழ்வுகள் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் நெறிப்படுத்தலிலும் பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபா தலைமையில் இடம்பெற்றன.

பட்டமளிப்பு விழாவின் முதல் அமர்வின் விஷேட பேச்சாளராக அமெரிக்க-இலங்கை ஃபுல்பிரைட் ஆணைக்குழுவின் புதிய நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பெட்ரிக் மெக்னமாரா கலந்து கொண்டு உரையாற்றினார்.

முதலாம் நாளின் முதலாவது அமர்வில் கலை கலாசார பீடத்தைச் சேர்ந்த 342 பட்டதாரிகளும் இரண்டாவது அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 355 பட்டதாரிகளும் மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த 430 பட்டதாரிகளும் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.





# சந்திப்பும் கலந்துரையாடலும்!

(அஸ்ஹர் ஆதம்)

சவுதி அரேபியாவின் இலங்கைக்கான தூதவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானியை மெட்ரோபொலிடன் கல்வி நிறுவனத்தின் தலைவரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் சந்தித்துக் கலந்துரையாடினார்.



# வாய் புற்றுநோய் தொடர்பில் இலவச நடமாடும் சேவை!



(அபு அலா, எம்.ஏ.ஏ.அக்தார்)

உலக பல்வலி தினத்தை முன்னிட்டு "வெற்றிலை, புகை பிடித்தலைத் தவிர்த்து வாய்ப்புற்று நோயைத் தடுப்போம்" எனும் தொனிப் பொருளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் இலவச நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

ஆலையடிவேம்பு கண்ணகிபுர கிராமத்தில் வசித்துவரும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த இலவச பல் வைத்திய சேவையுடன் விழிப்புணர்வு நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகிலா இஸ்ஸதீனின் அறிவுரை மற்றும் ஆலோசனைக்கமைவாக, கல்முனை பிராந்திய பல் வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எச். எம்.சறூகின் தலைமையில் கீழ், ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி ஏ.பிரசாந்தினி மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட குழுவினர் இந்தச் சேவையை முன்னெடுத்தனர்.





# தம்பலகாமம் பிரதேச கலைஞர் கௌரவிப்பு

(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேச கலைஞர்கள் கௌரவிப்பு விழா திருகோணமலை ஆதி கோனேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நேற்று (10) இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி. ஜெயகௌரி ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வை இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மாவட்ட அரச அதிபருக்குப் பாடசாலை மாணவ, மாணவர்கள் அமோக வரவேற்பளித்தனர்.

கலைஞர்கள் கௌரவிப்பில் ஊடகம், கலை, எழுத்துத் துறை என சுமார் 117 கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி கலந்து கொண்டார்.

அறநெறி பாடசாலை மாணவ மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இதன் போது மேடையேற்றப்பட்டன.

மாவட்ட அரச அதிபர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் பிரதேச செயலாளரால் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது. விசேடமாக சிரேஷ்ட கலைஞர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டனர்.







# பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் குரலாக நாடாளுமன்றத்தில் ஒலித்த ஹரீஸ் எம்.பி.!

## நஷ்டஈடு வழங்கவும் கோரிக்கை விடுத்தார்!!

(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்செய்கை அழிந்தது மட்டுமல்லாமல் ஆயிரக் கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவைச் சந்தித்து உடனடியாக நஷ்ட ஈட்டை வழங்குமாறு கோரியிருந்தேன்.

அதற்கான படிவத்தைப் பெற்று இப்போது விவசாயிகள் மும்முரமாக நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு வழங்கத் தயாராக உள்ள நஷ்ட ஈடு அவர்களுக்கு போதுமானதாக இல்லை.

அவர்கள் முதலீடு செய்த தொகைக்கு ஓரளவு ஈடு கொடுக்கக் கூடிய அளவுக்காவது அவர்களுக்கான நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.



வெள்ளிக்கிழமை (09) நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் உரை நிகழ்த்திய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

என்னைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் காணியில் செய்கை செய்யப்பட்டு அறுவடைக்கு தயாராக இருந்த நெற்செய்கை பாதிக்கப்பட்ட விடயத்தை இந்த சபைக்கு கொண்டு வர வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது.

அந்த வகையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முறையான நஷ்ட ஈட்டைக் கோருகிறேன்.

அதேபோன்று இந்த வெள்ள அனர்த்தம் காரணமாக நீர்ப்பாசனத் திணைக்களக் குளக்கட்டுக்கள், மதகுகள், அடங்களாக பல கட்டுமானங்கள் அம்பாறையில் சேதமடைந்துள்ளன.

இதனால் அடுத்த போகத்துக்கான விவசாய நடவடிக்கையில் ஈடுபட முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். அவற்றை மீள புனரமைக்க 4 ஆயிரம் மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நான் உட்பட இசாக் ரஹ்மான், பைசால் காசிம் போன்ற எம்.பி க்கள் ஜனாதிபதியை சந்தித்து இது சம்பந்தமாக பேசியிருந்தோம். அந்த நிதியை நீர்ப்பாசன அமைச்சர் உடனடியாக ஒதுக்கீடு செய்து புனரமைப்பு வேலைகளை துரிதமாக முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கிறேன்.- என்றார்.





# வெற்றுக் கொள்கலன்கள் சேகரிக்கும் பணி வெற்றி!

(வி.ரி. சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கோட்டைக்கல்லாறு பிரதேசங்களில் காணப்படும் வெற்றுக் கொள்கலன்களை அகற்றும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் வெள்ளிக்கிழமை (09) இடம்பெற்றது.

இதன்போது கோட்டைக்கல்லாறு பொது விளையாட்டு மைதானம் மற்றும் கோட்டைக்கல்லாறு கிராமத்தின் நீரேந்தும் பகுதிகளை அண்டிய பிரதேசங்கள் என்பன பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட இளைஞர் கழக உறுப்பினர்களின் பங்களிப்புடன் சுத்தம் செய்யப்பட்டது.

பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வானது கரையோரம் பேணல் அபிவிருத்தி உத்தியோகத்தர், களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் களுதாவளை பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெற்றது.